முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

O.S.No.32/2024 பெயர் : ஈஸ்வரி நாள் : 21.07.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்தை நான் 1999-ல் கிரையம் பெற்றேன் என்றால், சரிதான். தாவா சொத்தில் கட்டிடம் உள்ளது. கிரையம் பெற்ற சொத்தின் சர்வே எண்.128/1 ஆகும். 2 வருடங்களுக்கு முன்பு வங்கிக்கு லோன் பெறுவதற்காக சென்றபோது, சர்வே எண் தவறு என்பதை தெரிந்து கொண்டேன். சர்வே எண் தவறாக உள்ளது என்பது குறித்து நான் தாலுக்கா அலுவலகத்தில் மனு செய்தேன். தாவா சொத்தின் சரியான சர்வே எண்.124/4 ஆகும். தாவா ராஜேந்திரன் மீது தாக்கல் செய்தேன், அவர் இறந்த பிறகு அவரது வாரிசுகளை தரப்பினர்களாக சேர்த்துள்ளேன். 1-ம் பிரதிவாதி ராஜேந்திரன் தொந்தரவு செய்ததாக தாவா தாக்கல் செய்துள்ளேன், அவ்வாறு அவர் எந்தவித தொந்தரவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா எண் தவறாக உள்ளது என்று நான் கொடுத்த மனுவிற்கு பதில் கொடுத்தார்களா என்றால், கொடுத்தார்கள். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னாலும், சரியல்ல.